# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட்,

நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590.


**ஆணை நாள்.02.06.2026**

**முன்னிலை**

**திரு. ரா. பிரியகுமார், பி.எஸ்.சி., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்கள். SA 8792,2869/B/2024**

திரு. S. முருகானந்தம் ... மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொது தகவல் அலுவலர்,
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
மதுரை கிழக்கு,
மதுரை மாவட்டம்-625002. ... பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்குகளின்மீது இவ்வாணையத்தால் (12.05.2026) அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினைத் தொடர்ந்து (02.06.2026) இன்று நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.S.முருகானந்தம் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக பொது தகவல் அலுவலர், திருமதி. R. மீனா, தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ), மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம் அவர்கள் ஆஜராகி, மனுதாரரின் கோரிக்கையின்படி காதக்கிணறு ஊராட்சி அய்யா அவென்யூ பகுதியில் குப்பை கொட்டுவது தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டதாக தெரிவித்து அதற்கான புகைப்படங்களை ஆணையத்தின் பார்வைக்குச் சமர்ப்பித்ததுடன், காதக்கிணறு சண்முகவேல் நகரில் தனி நபர் விநாயகர் கோவில் கட்டி அதன் அருகில் உள்ள நீர்நிலைப் பகுதியை ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது தொடர்பாக ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்து வட்டாட்சியருக்கு ந.க.எண்.4017/2025/தி6, நாள்.18.05.2026 தேதியிட்ட கடிதம் அனுப்பப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆணையத்திடம் தெரிவித்தார். எனவே ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினைப் பிறப்பிக்கின்றது:-

- **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 நாட்களுக்குள் வட்டாட்சியர், மதுரை கிழக்கு வட்டம், மதுரை அவர்கள் மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்ற உரிய நடவடிக்கை மேற்கொண்டு நடவடிக்கை குறித்த அறிக்கையினை இந்த ஆணையத்திற்கு 08.07.2026-ற்குள் பதிவு அஞ்சல் வாயிலாக சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது.**

- **தவறும்பட்சத்தில், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 20(1) மற்றும் பிரிவு 20(2)-ன்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கப்பட்டு, இம்மனுக்கள் முற்றாக்கம் செய்யப்படுகின்றன.**

**ஒம்/-(ரா. பிரியகுமார்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**வழக்கு எண்கள். SA 8792,2869/B/2024**

**பெறுநர்**

1. வட்டாட்சியர்,
   மதுரை கிழக்கு வட்டம்,
   மதுரை-625107.

2. பொது தகவல் அலுவலர்,
   துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
   வட்டார வளர்ச்சி அலுவலகம்,
   ஊராட்சி ஒன்றிய அலுவலகம்,
   மதுரை கிழக்கு,
   மதுரை மாவட்டம்-625002.

3. மேல்முறையீட்டாளர்,
   திரு. S. முருகானந்தம்,
   எண்.1/1164, அய்யா அவென்யூ,
   சண்முகவேல் நகர்,
   காதக்கிணறு,
   மதுரை-625104.
   செல்.9843109012.

Copy to: File. GP PC
020626